REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: ஆவணி 29உ புதன் (14—9—55) ★ ★ வெளியூர்: ஆவணி 30உ வியாழன் (15—9—55) [இதழ் 79

## மைசூர் தங்கச் சுரங்கங்கள்:

### சொத்துக்களை மதிப்பிட மத்திய ஆட்சி அதிகாரிகள்

மைசூர் மாநிலத்திலுள்ள கோலார் தங்கவயல் சுரங்கங்களை தேசிய மயமாக்குவதற்கு மைசூர் சர்க்கார் தீர்மானித்துள்ளனரல்லவா? அச்சுரங்கங்களின் சம்பந்தமான கணக்குகளையும், சொத்துக்களையும் மதிப்பிடுவதற்கு நான்கு அதிகாரிகளை மத்திய சர்க்கார் அனுப்பியுள்ளனராம்!

இந்தத் தகவலை அறிவித்த மைசூர் உள்நாட்டு அமைச்சர், மத்திய சர்க்கார் அதிகாரிகளுடன் ஒத்துழைப்பதற்கு மாநில சர்க்காரும் சில அதிகாரிகளை நியமிப்பர் என்று குறிப்பிட்டுள்ளார்.

# அகதிகளின் உடைமை மோகம்!

## பாகிஸ்தானில் அனுதைகளாகக் கிடந்தனர்!

## இந்தியாவில் உடைமை தேடுகின்றனர்!

### இந்தியப் பேரரசின் புதிய சலுகை

"ஒவ்வொரு அகதிக்கும் ஒதுக்கப்பட்டுள்ள சொத்தின் மதிப்பு ரூ. 5,000-த்திலிருந்து ரூ. 10,000-த்துக்கு உயர்த்தப்படுகிறது;

"அதாவது, மனுகொடுத்தவர், கொடுக்காதவர் ஆகிய இரு வகையினராலும் அனுபவிக்கப்பட்டுவரும் வீடு, கடைகளின் மதிப்புத் தொகை ரூ. 10,000-மாக இருக்கும்பட்சத்தில், அவைகள் ஏலத்திற்கு விடப்படமாட்டாது; ஏலத்திற்கு விடக்கூடாது என ஏற்கனவே, வீட்டிற்கு ரூ. 5,000 எனவும், கடைகளுக்கு ரூ. 2,000 எனவும் விலக்களிக்கப்பட்டிருந்தன;

"இந்தப் புதிய ஏற்பாட்டின் மூலம் இரண்டு இலட்சம் அகதிகள் உடைமைகளைப் பெற இருக்கின்றனர்; தாங்கள் அனுபவித்து வரும் வீடு, கடை முதலிய அசையா உடைமைகளின் மதிப்புத் தொகையை, தவணைகளாகச் செலுத்தும் உரிமை அகதிகளுக்கு உண்டாகிறது."

மேற்படி வீடு, கடைகளை அனுபவித்து வரும் அகதிகள், தங்களால் கொடுக்கப்பட வேண்டியுள்ள தவணை நிலுவைத் தொகைகளை உடனடியாகச் செலுத்திவிடும்படியும், அத்தொகையைக் கொண்டுதான் மற்ற அகதிகளுக்கு நஷ்டஈடு கொடுப்பது சாத்தியமாகும் என்றும் அகதிகள் அமைச்சர் மக்கள் சபையில் கூறினர்.

ரூ. 18 கோடி அளவிற்கு இவ்வாண்டு ஜூலைத் திங்கள் முடிவிற்குள் அகதிகளுக்கு நஷ்டஈடு கொடுக்கப்பட்டுள்ளது என்றும் இவ்வாண்டு முடிவிற்குள் மேலும் ஒரு இலட்சம் அகதிகளுக்கு நஷ்டஈடு கொடுக்கப்பட்டுவிடும் என்றும், அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அடுத்த ஆண்டிலும், மூன்றும் ஆண்டிலும் ஆண்டொன்றுக்கு ஒரு இலட்சம் அகதிகள் வீதம் நஷ்டஈடு கொடுக்கப்படும் என்றும் அமைச்சர் அறிவித்துள்ளார்.

"இப்புதிய ஏற்பாட்டின்படி மேற்கு பாகிஸ்தானில் எந்தவித உடைமையும் பெற்றில்லாதவர்களும், இந்தியாவில் அசையா உடைமையைப் பெறுவதற்கு நாம் ஏற்பாடு செய்தவர்களாகிறோம்; எனவே, உடைமையைப் பெறுகிற அகதிகள் அவ்வுடைமைகளுக்காகத் தாங்கள் செலுத்த வேண்டிய தொகையை, நஷ்டஈடுக்காகக் காத்துக்கிடக்கும் தங்கள் சகோதர அகதிகளின் நலன் கருதி, தாமதிக்காமல் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள்."

"தாங்கள் அனுபவித்துவரும் உடைமைகளுக்காகச் செலுத்த வேண்டிய தவணைத் தொகையை வசூலிக்காமல் நிறுத்திவைக்கச் செய்ய, கரங்களில் விளக்கேந்தி, நேற்று மக்கள் சபை முன் வந்து ஆர்ப்பாட்டம் செய்து, அக்கடன் தொகையை வசூலிக்கும் காலக் கெடுவை நீடித்துவைக்க எனக்கு 'அறிவு ஒளி' காட்ட வந்த அகதிகளின் கோரிக்கைக்கு இணங்க முடியாதே என அஞ்சுகிறேன்."

மேற்கண்டவாறும் அகதிகள் அமைச்சர் அறிவித்துள்ளார்.

## பஞ்சத்திற்குப் பலி!

### காட்டுப் பழங்கள்—கிழங்குகளைத் தின்ற 30-பேர் கதி

கோவா பகுதியைச் சேர்ந்த டாமன் கிராமப் பகுதிகளில் கடுமையான பஞ்ச நிலைமை ஏற்பட்டுள்ளதாம்.

கிழங்குகளையும், காட்டுப் பழங்களையும் தின்று மக்கள் உயிர் வாழ வேண்டியிருக்கிறதாம்.

கடந்த பத்து நாட்களில், கிராம எல்லைப் பகுதிகளில் இதன் காரணமாக ஏற்பட்ட வயிற்றுப் போக்கு, மற்ற இதர நோய்களால் 30-பேர் மாண்டு போயினர் என்று செய்திகள் கூறுகின்றன.

## கிளர்ச்சியின் எதிரொலியா?

புதுடில்லி, செப். 13—

திட்டமிடப்பட்ட ரீதியில் மலைப் பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதற்கும், அப்பிரதேச மக்களின் பிரச்சினைகளைக் கவனிப்பதற்கும் தனியாக ஒரு அமைச்சர் இலாகா ஏற்படுத்துவது பற்றி பிரதமர் பரிசீலனை செய்து வருகிறாராம்.

இப்பிரச்சினை பற்றிய எல்லா அலுவல்களையும் பிரதமரே கவனித்தாலும் கூட, இதற்கென்றே தனியாக ஒரு அமைச்சரை நியமிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளதாம்.

## பாகிஸ்தானில்

### இராணுவத்தினருக்குக் குடியிருப்பு வசதிகள்

### ரூ. 100 கோடியில் திட்டம்

தரைப்படை, கப்பல் படை, விமானப்படை ஆகிய முப்பெரும் படைகளுக்கான குடியிருப்பு இருப்பிட வசதிகள், அலுவலகங்கள், பயிற்சிக்கூடங்கள் ஆகியவை அமைத்துத் தருவதற்காக சுமார் நூறு கோடி பெறுமான திட்டங்கள், இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்வதற்கென தயாரிக்கப்பட்டுள்ளனவாம்.

# 'விடுதலைக் கோரிக்கை விட்டுக்கொடுக்கக்கூடியதல்ல!'

## "'இந்தியா' என்ற அமைப்பு எப்போது உருவாயிற்று?"

### சென்னைக் கூட்டத்தில் சம்பத் முழக்கம்

"நாம் 'திராவிட நாடு திராவிடருக்கு ஆக வேண்டும்' என்று கூறிவருகிறோம்; ஆனால், வட நாட்டவர், இந்தியாவின் ஒற்றுமை பற்றிப் பேசுகிறார்கள்;

"திராவிட நாடு இன்று இருப்பதுபோன்று என்றும் வட நாட்டுடன் சேர்ந்திருக்கவில்லை; இன்று உள்ள இந்தியாகூட, எப்போதும் ஒரு குடையின்கீழ் இருந்தது இல்லை;

"1750-ம் ஆண்டில்தான், 'இந்தியா' என்ற ஒரு அரசியல் அங்கம் உருவாக வேண்டும்—என்ற எண்ணமே முளைத்தது;

"அந்த எண்ணம், அடுத்தடுத்து வெள்ளையர்களின் பெருத்த ஆயுத பலத்தால் ஒரு 'உருவம்' பெற முற்பட்டது; நாளுக்குநாள் வளர்ந்துகொண்டே வந்த அவர்களின் ஆயுத பலத்தால் அந்த 'உருவம்' பெருத்துக்கொண்டே சென்றது; ஆனால், பெருத்துக்கொண்டே சென்ற அந்த 'இந்தியா' என்ற உருவம் நிலைத்ததா என்றால், அதுவும் இல்லை; ஒரு நிலையில் நின்றதில்லை, அந்த உருவம்; மாறாக, எவ்வளவு விரைவாக அந்த 'இந்தியா' உருவாயிற்றோ, அவ்வளவு விரைவாகச் சிதையவும் முற்பட்டது; பர்மா, சிலோன், பாகிஸ்தான்—இவை எல்லாம் முன்னாளைய 'இந்தியா'வின் மாகாணங்களாயிருந்தவை;

"இப்படிச் சிதைந்துவரும் இந்த 'இந்தியா' என்ற உருவத்தில் வலுக்கட்டாயமாக ஆயுத பலத்தால் இணைக்கப்பட்ட திராவிடம், ஏன் இன்னும் ஒட்டிக்கொண்டிருக்க வேண்டும்?—என்று நாம் கேட்டுவருகிறோம்;

"நாம் வரலாற்றினைப் புரட்டிக்காட்டி, எந்த ஒற்றுமை காப்பாற்றப்பட வேண்டும் என்று விரும்புகிறார்களோ, அந்த 'இந்திய ஒற்றுமை'யை அக்கு வேறு—ஆணி வேறாகப் பிய்த்துக் காட்டும்போது, உடனே நமது முகவாய்க்கட்டையைப் பிடித்துக்கொண்டு கெஞ்சுகிறார்கள்;

"'வெள்ளையன் எத்தனையோ தீமைகளைச் செய்திருக்கலாம்; ஆனால், அவன் செய்த நன்மை, வடக்கையும்—தெற்கையும் ஒன்றாக்கியதுதான்; அந்த நன்மையை நாம் பயன்படுத்திக்கொள்ளக்கூடாதா? நாம் ஒன்றாகவே இருக்கக் கூடாதா?'—என்று, இந்த நாட்டுக் கவர்னர் பேசியிருக்கிறார்;

"நாம் தெளிவாகச் சொல்லிவருகிறோம்—நம்முடைய அளவில், நம்மைப் பொறுத்த மட்டில், ஒன்றாக்கப்பட்ட 'இந்தியா' என்ற அமைப்பிலிருந்து நாம்-தென்னாடு விடுபட்டாலன்றி வாழ்வில்லை—என்பதை!"

—என்று, சென்னை—கோமளீசுவரன்பேட்டை 31-வது வட்ட தி. மு கழகத்தின் ஏழாம் ஆண்டுத் துவக்க விழாவில் சிறப்புரை ஆற்றுகையில், தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் குறிப்பிட்டார்.

சென்னை கோமளீசுவரன் பேட்டை 31-வது வட்ட தி. மு கழக ஏழாம் ஆண்டுத் துவக்க விழா 11—9—55 மாலை 6-30 மணி அளவில் நடைபெற்றது.

தோழர் அந்தோணி எப், மாறன் தலைமை வகித்து சிறிது நேரம் பேசினர்.

அடுத்து, தோழர் எம். எஸ். அப்துல் காதர் பேசினர்.

தோழர் கே. ஆர். இராமசாமி அவர்கள், சிறிது நேரம் பேசிவிட்டு, இயக்கப் பாடல் ஒன்றும் பாடினர்.

பின்னர், தோழர் முகவை - ஆர். எஸ். பாண்டியன் பேசியதும், தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் அரியதோர் சிறப்புரை நிகழ்த்தினர்.

தலைவர் முடிவுரைக்குப் பின், நன்றி நவிலலுடன், கூட்டம் இனிது முடிந்தது.

கூட்டத்தில், பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது.

கூட்டத்தில் இரு அனுதாபத் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

★

தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் பேசியதாவது:—

"ஆண்டு விழாக்கள், காலம் வளர்ந்துகொண்டிருக்கிறது என்பதைக் காட்டும் காலக்கட்டம்; இன்று தி. மு கழகம் பிறந்து ஆறு ஆண்டுகள் முடிந்து, ஏழாவது ஆண்டு துவங்குகிற விழாவினை இந்த வட்ட தி. மு கழகத் தோழர்கள் கொண்டாடுகின்றனர்;

"இன்று நாட்டில் பல்வேறு அரசியல் நிகழ்ச்சிகள் சம்பவங்கள் நடைபெறுவதை நாம் காண்கிறோம்;

"முன்பெல்லாம், அரசியல் சம்பவங்கள் நல்ல இடைவெளிவிட்டு

(4-ம் பக்கம் பார்க்க.)

## கோவா விடுதலைக்கு அறிகுறியா?

சர்வதேச 'சக்தி'கள், கோவா பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முயற்சிகள் மேற்கொண்டுள்ளனவாம்; ஆகவே, விரைவிலேயே இப்பிரச்சினைக்கு 'நல்ல முடிவு'கள் ஏற்படக்கூடுமாம்.

பிடிவாதப் போக்குடன் இது வரையில் நடந்து கொண்ட போர்ச்சுகீசிய சர்க்கார், இடரென்று இந்தியாவின் இப்பகுதிகளிலிருந்து வெளியேறுவதால் ஏற்படும் 'இழுக்கு நிலை' தங்களைப் பாதிக்காதிருக்க, ரொக்கமாகப் பண நஷ்டஈடு தருமாறு கோரலாம் என்று கருதப்படுகிறதாம்!

## 18 'ரவுண்டு'கள் சுட்டனர்

### 10-பேருக்குக் காயம்

கட்டாக், செப். 13—

கோஞ்சார் மாவட்டத்திலுள்ள பார்பில் மாங்கனீஸ் சுரங்கத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்; அவர்கள் மீது போலீசார் 18 'ரவுண்டு'கள் சுட்டுள்ளனர்.

தங்கள் கோரிக்கையை ஒட்டி, சுரங்கக் கம்பெனி அதிகாரிகளை தொழிலாளர்கள் சூழ்ந்து கொண்டனராம்; உடனே போலீஸ் வரவழைக்கப்படவே, தொழிலாளர்கள், போலீசார்மீது கல்லெறிந்தனராம்; அதனால், ஐந்து போலீசார் காயமடைந்தனராம்

துப்பாக்கிப் பிரயோகத்தில் 10-தொழிலாளர்கள் காயமடைந்தனர் என்று கூறப்படுகிறது.

## 'இராஜினாமா செய்யுங்கள்!'

எதென்ஸ், செப். 13—

சைப்ரஸ் பிரச்சினையை சரியான முறையில் சமாளிக்காத காரணத்தினால், பீல்டு-மார்ஷல் அலெக்சாண்டர் பாபகோஸ் மந்திரி சபை இராஜினாமா செய்யவேண்டுமென்று கிரேக்க நாட்டுப் பார்லிமெண்டில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கோரியுள்ளனராம்.

## 'கம்யூனிஸ்டு கட்சியைக் கலைத்து விடுக!'

பிரெஞ்சு சர்க்கார், அல்ஜீரியாவிலுள்ள கம்யூனிஸ்டு கட்சியைக் கலைத்துவிடுமாறு உத்திரவு பிறப்பித்து விட்டனராம்.

உத்திரவைப் பிறப்பித்த உடனேயே எல்லாக் கம்யூனிஸ்டுக் கட்சி காரியாலயங்களும் சோதனையிடப்பட்டனவாம்.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 14—9—'55 புதன்

# கேள்வியின் நியாயம்!

திராவிடத்தின் பொன் விளையும் பூமி கோலார்! அங்குள்ள தங்க வயல்களில் தொழில் நடத்துவோர் வெள்ளைக்காரர்கள். கடந்த எழுபத்தைந் தாண்டுகளாக, வெள்ளையர்கள் அந்தத் தொழிலை மேற்கொண்டு கோடிக்கணக்கான ரூபாய் இலாபம் சம்பாதித்து வருகின்றனர்.

'வெள்ளை ஏகாதிபத்தியத்தை விரட்டிவிட்டோம்; அவர்களின் சுரண்டலை ஒழித்துவிட்டோம்,' என்று பெருமை பேசிக்கொள்ள காங்கிரசார் தவறுவது கிடையாது.

ஆனால், இந்தியாவின் ஆதிபத்திய உரிமையை வெள்ளையர்கள் கைவிட்டுவிட்டபோதிலும், அவர்கள் அந்த உரிமையைப் பெற்றிருந்த காலத்தில், இந்த நாட்டு வளங்களைக் கொள்ளையிடுவதற்கு அமைத்திருந்த கோட்டங்களின் ஆதிக்க உரிமையை அவர்கள் விட்டுவிடவில்லை. கோடானு கோடி ரூபாய் முதலீட்டுடன் இந்தியாவெங்கணும் துவங்கப்பட்ட பல தொழில், வாணிப நிலையங்கள் இன்றும் வெள்ளையர் வசம் இருக்கின்றன; அவர்களுக்கு இன்னும் இந்தியாவின் மண்ணில் பாத்தியதை இருக்கிறது—அந்தத் துறைகளைப் பொறுத்த வரையில்; பெருமை பேசும் காங்கிரசாரின் கண்களுக்குக் கோலார் தங்க வயல்கள் தென்படுவதில்லை; அவைபோன்றதொழில் நிறுவனங்களின் மூலம், வெள்ளையர் கொள்ளையிட்டுச் செல்லும் வளத்தின் அளவு தெரிவதில்லைபோலும்!

'நாட்டின் உயிர்நாடியாக உள்ள முக்கியமான எல்லாத் தொழில்களையும் தேசியமயமாக்க வேண்டும்,' என்ற எண்ணம் பிறந்த காலத்திலேயே, 'கோலார் தங்கவயல்களையும் தேசிய மயமாக்க வேண்டும்,' என்ற எண்ணமும் பிறந்தது.

கடந்த சமீப காலமாக கனம் அனுமந்தையாவை முதன் மந்திரியாகக்கொண்ட மைசூர் மந்திரிசபையினர், பொதுவாக எல்லோராலும் வற்புறுத்தப்பட்டு வருகிற கோலார் தங்க வயலை தேசியமயமாக்கும் கோரிக்கைக்குச் 'செயல் வடிவம்' தர முயற்சித்து வருகின்றனர்.

மைசூர் சட்டசபையில் தாக்கல் செய்வதற்கென அதற்கான மசோதா ஒன்றுகூட தயாராகிவிட்டது என்றும், மசோதா சட்டசபையில் உள்ள எல்லாக் கட்சியினரின் ஒருமுக ஆதரவைப் பெற்று நிறைவேறக்கூடும் என்றும், மைசூர் மந்திரிசபை தங்கவயல் தேசியமயமாக்குவதில் தீவிர அக்கறை காட்டிவருவதாகவும் செய்திகள் கூறுகின்றன.

முற்போக்கு எண்ணங்கொண்ட பலரின் பாராட்டுதலைப் பெறக்கூடிய வகையில் அனுமந்தையா மந்திரி சபையின் இந்த முயற்சி வெற்றி பெற இயலாமற் போய்விடுமோ என்று அஞ்சத்தக்க வகையில் வேறொரு செய்தியும் வெளிவந்திருக்கிறது.

கோலார் தங்கவயலை தேசிய மயமாக்குவது, 'சோஷலிசம் மாதிரி' சமூக அமைப்பிற்கு உடன்பட்டிருக்கிற இந்தியப் பேரரசின் 'முன்னேடி'களுக்குப் பிடிக்கவில்லை என்றும், ஏதேனும் காரணங்களைக் காட்டி மைசூர் மந்திரி சபையின் முயற்சியைக் கைவிடச் செய்ய வேண்டும் என்று அவர்கள் திட்டமிடுவதாயும் கூறப்படுகிறது.

இப்படி வெளிவந்துள்ள செய்தி முழுதும் 'ஆதாரமற்றது' என்று கூறிவிட முடியாதென்பதற்கு, மைசூர் முதன் மந்திரி அனுமந்தையா சில நாட்களுக்குமுன், 'எவரேனும் தங்களது அதிகாரத்தால், தங்கவயல் தேசிய மயமாவதைத் தடுக்க முற்பட்டால், என் தலைமையில் உள்ள மந்திரி சபை பதவியினின்றும் விலகிவிடும்,' என்று குறிப்பிட்டுள்ளது சுட்டிக்காட்டப்படுகிறது.

இந்தியப் பேரரசு, 'மாதிரி சோஷலிச'ப் பாதையை மேற்கொள்ளப் போவதாக அறிவித்திருப்பதால், அந்த 'மாதிரி சோஷலிச சமூகத்'தில், சுரண்டும் கொள்ளைக்காரனும், இருப்பான்—சுரண்டப்படுபவனும் இருப்பான் என்பதால், தங்க வயல் தேசிய மயமாவதை அவர்கள் தடுக்கக்கூடும் என்று கூறப்படுவது, ஆச்சரியத்திற்குரியதல்ல!

ஆனால், மைசூர் முதன் மந்திரி அனுமந்தையா, தனது மாநிலத்தில் உள்ள ஒரு முக்கியமான, பெருமளவு இலாபம் தரக்கூடிய ஒரு தொழிலை, அன்னிய நாட்டவரின் பிடியிலிருந்து விடுவித்து, சர்க்காரே அந்தத் தொழிலை மேற்கொண்டு நடத்த எடுத்துக்கொள்ளுகிற முயற்சியை அந்த மாநிலத்தில் உள்ள முற்போக்கு எண்ணம் படைத்த பலரும் வரவேற்றிருக்கின்றனர் என்பதால், தனது முயற்சி வெற்றி பெறுவதற்காக அவர் மத்திய சர்க்காரின் 'ஆகாத' போக்கை எதிர்த்துப் 'போர்க் குரல்' எழுப்பியிருக்கிறார். தங்கவயலை தேசியமயமாக்குவதை எதிர்த்து எவரேனும் தங்கள் அதிகாரத்தை நீட்டினால், தனது மந்திரி சபை பதவியினின்றும் விலகும் என்று, இந்தியப் பேரரசினை எச்சரித்திருக்கிறார்.

தன்னுடைய இந்த எச்சரிக்கையையும் பொருட்படுத்தாமல் இந்தியப் பேரரசு நடந்துகொள்ளும் என்று, அனுமந்தையா நினைக்கவில்லை என்றும் கூறப்படுகிறது.

நாம், மைசூர் முதல்வர் அனுமந்தையா அவர்களுக்கு மட்டுமின்றி, கன்னடத்தில் உள்ள முற்போக்கு எண்ணம் படைத்த அனைவருக்கும் எடுத்துக்காட்ட விரும்புவது மைசூர் மாநிலத்தில் உள்ள ஒருதொழில் தேசிய மயமாக்கப்படுவதற்கு டில்லியின் அனுமதி பெற வேண்டிய அவல நிலை நீடிப்பதால்தானே, 'அதிகாரத்தை நீட்டினால் விலகிவிடுவேன்' என்று பேச வேண்டியுள்ளது?—அதிகாரத்தை டில்லியிடம் தந்துவிட்டு, அவர்கள் அந்த அதிகாரத்தைக் கொண்டு மக்களின் ஒருமித்த விருப்பங்களை நிறைவேற்றவொண்ணாது செய்கிறார்களே, என்று வருந்துவது அவசியமானதுதானா?—அதிகாரத்தை டெல்லியிடம் ஏன் விட்டுவைக்கவேண்டும்?—என்பன போன்றவற்றைத் தான்!

'அனுமந்தையா'க்கள், இது போன்று அவ்வப்போது டெல்லியின் குறுக்கீடுகளுக்கு ஆளாகித் தவிக்க நேரிடுவதை எண்ணிப் பார்த்தால், நாம் எழுப்பும் கேள்வியின் நியாயம் நன்கு விளங்கும்.

# 'விடுதலை இயக்கத்தைக் காட்டிக் கொடுப்பதாகும்'

## கோவா பற்றிய காங்கிரஸ் தீர்மானம் பற்றி கருத்து

புனா, செப். 13—

'கோவா விடுதலைப் பிரச்சினை பற்றி அகில இந்திய காங்கிரஸ் நிறைவேற்றியுள்ள தீர்மானம், கோவா விடுதலை இயக்கத்தைக் காட்டிக் கொடுப்பதாகும்,"

என்று, குஜராத், கர்நாடகம், மகாராஷ்டிரம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த ம. சோ. கட்சித் தலைவர்களும், சட்டசபை உறுப்பினர்களும் தெரிவித்திருக்கின்றனர்.

"கோவா சத்தியாக்கிரகத்'தைக் கண்டிக்கும் காங்கிரசின் தீர்மானமும், இந்திய எல்லையிலேயே தொண்டர்களைத் தடுத்து நிறுத்துகிற பம்பாய் சர்க்காரின் கொள்கையும் ஒரு தலைப்பட்சமான நோக்கின் விளைவுகளாகும்,"

என்றும், அவர்கள் கருத்தறிவித்திருக்கின்றனர்.

கோவா விடுதலை உதவிக் குழுவில், தங்கள் கட்சியின் பிரதிநிதிகளாயிருப்போர், அந்தக் குழு தொடர்ந்து 'சத்தியாக்கிரகத்'தில் ஈடுபட வேண்டும் என்றும், ஆனால் போராட்டம் கோவா விடுதலைக்கு உதவுவதாயிருக்க வேண்டுமே தவிர மத்திய சர்க்காருக்குத் தீங்கிழைப்பதாக இருக்கக்கூடாது என்றும் அவர்கள் எச்சரித்துள்ளனர்.

மக்கள் சபையில்:

# காதால் கேட்டவை!

"ஆறு குழந்தைகளுக்குத் தாயான ஒரு விதவையை மணந்துகொண்ட ஒரு இளைஞனுக்கு ஒப்பிடலாம்—இந்திய விமானப் போக்குவரத்து நிறுவனத்தை!"

என்று டி. போத்ரா என்பவர் குறிப்பிட்டிருக்கிறார்.

"விமானிகளின் உயிர்களுக்கும் விபத்துக்களின்போது ஆபத்து இருக்கிறது என்பதினால்தான், விபத்துக்கள் குறைவாயிருக்கின்றன; இல்லாவிட்டால் இன்னும் நாட்டில் விமான விபத்துக்கள் அதிகமிருக்கக்கூடும்"

என்று பி. சி. கோஷ் என்ற உறுப்பினர் கூறியிருக்கிறார்.

"சில நேரங்களில், நான் டில்லியிலிருந்து கல்கத்தாவிற்குச் செல்லுகையில், விமானத்தில், பூப்பந்தாட்டம் ஆடக்கூடிய அளவு இடமிருப்பதைப் பார்த்திருக்கிறேன்;"

என்று பூபேஷ் குப்தா என்பார் பேசியிருக்கிறார்.

சென்ற உலக மகாயுத்தம் முடிவடைந்த பிறகு, இதுவரை இந்தியாவில் மொத்தம் 762.42 மைல் நீளமுள்ள 19 இரயில் பாதைகள் புதிதாகப் போடப்பட்டுள்ளன.

# புரட்சித் தலைவர்

## சுதந்திரக் குடிமகனாக நாடு திரும்புகிறாராம்

காட்மண்டு, செப். 11—

நேப்பாள புரட்சித் தலைவரான டாக்டர் கே ஐ சிங், சுதந்திரக் குடிமகனாக காட்மண்டுவுக்குத் திரும்புகிறார்.

நேப்பாள மன்னர் மகேந்திரர், அவருக்கு மன்னிப்பு அளித்துவிட்டாராம்!

இங்கு அவர் இன்று வருவதாயிருந்தது; ஆனால், உடல்நலக்குறைவால் வரவில்லை; அவரை வரவேற்க மாலைகளுடன் காத்திருந்த ஏராளமான மக்கள் ஏமாற்றமடைந்தனராம்.

நாட்டில் நடமாடுவதற்கு அவருக்குத் தடை ஏதும் விதிக்கப்படவில்லை என்றாலும், அவருடையவும், அவர் சகாக்களுடையவும் நடவடிக்கைகள் சிலகாலத்திற்கு கண்காணிக்கப்படும் என்று தெரிய வருகிறது.

### சீனாவில் நடவடிக்கைகள்

"டாக்டர் சிங் சீனாவில் பீகிங் நகரில் அபயம் பெற்றிருந்த மூன்றாண்டுக் காலத்தில், நகரை விட்டு எங்கும் செல்ல அனுமதிக்கப்படவில்லை,"

என்று டாக்டர் சிங்குடன் சீனாவிலிருந்த மூவரில் ஒருவரான இந்திரலால் என்பார் தெரிவித்திருக்கிறார்.

"டாக்டர் சிங் ஒருபோதும் மா-சே-துங்கையோ, பிரதமர் சௌஎன்-லாயையோ சந்தித்துப் பேச அனுமதிக்கப்படவில்லை; டாக்டர் சிங், மற்றும் அவருடன் இருந்தவர்கள் எல்லாம், பிரதமர் நேரு சீனா வந்திருந்தபோது அவர்களைச் சந்திக்க அனுமதிக்கப்படவில்லை; மேலும் பீகிங்கிலிருந்த தலைலாமாவைக் கூட சிங் கோஷ்டியினர் பார்க்கவில்லை,"

என்பதாகவும் தெரிவித்திருக்கிறார்.

# 'சாணக்கியபுரி'யில் தங்குவதற்கு வசதி!

## ரூ. 1 கோடி செலவில் ஒரு ஓட்டல் நிறுவப்படுமாம்

### இந்திய சர்க்காரின் முதலீடும் உள்ளதாம்

புதுடில்லி, செப். 12—

தங்குவதற்கு வசதியாக உள்ள ஓட்டல்கள், புதுடில்லியில் அதிகமாகத் தேவைப்படுகிறதாம்; சாணக்கியபுரியில் அதற்காக ஒரு ஓட்டலை நிறுவி நிர்வகிப்பதற்காக 'லிமிடெட்' நிறுவனம் ஒன்று துவக்கப்படுமாம்.

இந்நிறுவனத்தின் மொத்த முதலீடு ரூ. 1 கோடியென்றும், இதில் ரூ. 25 இலட்சத்தை இந்திய சர்க்கார் முதலீடாகச் செலுத்துமென்றும் கூறப்படுகிறது. இம்மூலதனத்திற்கேற்ப இந்திய சர்க்காருக்கு 'ஒட்டு'ரிமை உண்டாம்; அவர்கள் இரு 'டைரக்டர்'களை நியமிப்பார்களாம்.

# மத்திய ஆட்சியின் நிதி உதவி விவரம்

### கைத்தொழில்கள் அபிவிருத்தி

கைத்தொழில்களின் அபிவிருத்திக்காக சகாயத் தொகையாகவும், கடனுதவியாகவும் மேற்கொண்டு சுமார் 8 இலட்சம் ரூபாய் இந்திய சர்க்கார் வழங்கியிருக்கின்றனர்.

பம்பாய், பெங்களூர், ஐதராபாத், கல்கத்தா ஆகியவிடங்களில் நான்கு பிராந்திய 'டிசைன் சென்டர்'களை ஏற்படுத்துவதற்காக, போர்டுக்குச் சகாயத் தொகையாக ரூ. 1,39,500 வழங்கப்பட்டிருக்கிறது.

அடுத்த மாதத்தில் மாஸ்கோவில் கைத்தொழில்கள் கண்காட்சியொன்றை நடத்த ஏற்பாடு செய்வதற்காக, ரூ 3,80,000 வரை செலவிட போர்டுக்கு அனுமதியளிக்கப்பட்டிருக்கிறது. இதற்காக ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள ஒரு இலட்ச ரூபாயும் இத்தொகையில் அடங்கியிருக்கிறது.

ஸ்டாக்ஹோமில் நடைபெறும் செயின்ட் எரிக் கண்காட்சியில் இந்தியக் கைவேலைப் பொருள்களை பார்வைக்கு வைக்க ஏற்பாடு செய்வதற்காக ரூ. 39,700 வரை செலவிடவும் போர்டுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

டில்லியில் அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் இந்தியத் தொழில் கண்காட்சியில் கலந்துகொள்ளுவதற்காக ரூ 2,00,000 வரை செலவிட போர்டுக்கு அனுமதியளிக்கப்பட்டிருக்கிறது.

மற்றும் ஐதராபாத் மாநிலத்துக்குக் கடனுதவியாக முறையே ரூ 60,000 — ரூ. 2,050-ம், மேற்கு வங்காளத்துக்குக் கடனாக ரூ. 12,000-மும் வழங்கப்பட்டிருக்கிறது.

### சிறு தொழில்கள் அபிவிருத்தி

சிறு தொழில்களின் அபிவிருத்திக்காக, பம்பாய், பீகார், ஜம்மு-காஷ்மீர், இராஜஸ்தான், டில்லி, மத்திய பாரத் ஆகிய ஆறு மாநிலங்களுக்கு சகாயத் தொகையாகவும், கடனுதவியாகவும் மேற்கொண்டு இந்திய சர்க்கார் சுமார் ரூ. 30 இலட்சம் வழங்கியிருக்கின்றனர்.

இந்தத் தொகையில் பம்பாய் மாநிலத்துக்குக் கடனாக ரூ. 25 இலட்சமும், சகாயத் தொகைகளாக முறையே ரூ. 10,950—ரூ. 4,800-ம் வழங்கப்பட்டிருக்கிறது.

பீகாருக்குக் கடனாக ரூ 1,23,500-ம் சகாயத் தொகையாக ரூ. 1,00,600-ம், ஜம்மு-காஷ்மீருக்குக் கடனாக ரூ. 22,000-ம் சகாயத் தொகையாக ரூ. 15,680 — ரூ. 3,460-ம், இராஜஸ்தானுக்குச் சகாயத் தொகையாக ரூ 80,880-ம், கடனாக ரூ. 30,000-மும், டில்லிக்குச் சகாயத் தொகையாக ரூ. 48,100-ம், மத்திய பாரத்துக்குச் சகாயத் தொகையாக ரூ. 16,500-ம் வழங்கப்பட்டிருக்கிறது.

### மண்வளப் பாதுகாப்பு திட்டம்

மூன்று மாநிலங்களின் மண்வளப் பாதுகாப்புத் திட்டங்களுக்கு உதவியளிக்கும் பொருட்டு இந்திய சர்க்கார் ரூ. 5,48,000 சகாயத் தொகையும், ரூ 2,85,000 கடன் தொகையும் வழங்கியுள்ளனர்.

சென்னை மாநிலத்தில் வட ஆற்காடு மாவட்டத்தில் மண்வளப் பாதுகாப்புத் திட்டமொன்றுக்காக சென்னைக்கு சகாயத் தொகையாக மொத்தம் ரூ. 50,750 வழங்கப்பட்டிருக்கிறது; இந்தத் திட்டத்துக்குக் கடனாக ரூ. 2,85,495 வழங்குவதற்கும் அனுமதியளிக்கப்பட்டிருக்கிறது.

கேலேகாய் மண்வளப் பாதுகாப்புத்திட்டத்துக்காக 1955-56ம் ஆண்டில் மேற்கு வங்காளத்துக்குச் சகாயத் தொகையாக மொத்தம் ரூ. 41,61,000 வழங்கப்பட்டிருக்கிறது.

# செப்டம்பர் 17-23: நாட்டுப் பிரிவினை வாரம்

# 'எந்தத் தனி மனிதரையும் நம்பியிருக்கவில்லை'

## குடியரசுக் கட்சி பற்றி ஐசனேவர்

டென்வர் (கோலராடோ) செப். 12—

"குடியரசுக் கட்சி எந்த ஒரு தனி மனிதர் பலத்திலும் இருக்கவில்லை;

"குடியரசுக் கட்சிக்கு உற்சாகம், உயர்தர நிர்வாகிகள், நல்ல தலைமை இவை எல்லாம் குறைவு; நாம் ஒரு தனி மனிதரை மட்டுமே நம்பியிருக்கிறேம் என்பதை நாம் நம்பவில்லை —ஏற்றுக்கோள்ளவில்லை,"

என்று, அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஐசனேவர் குறிப்பிட்டிருக்கிறார்.

48 அமெரிக்க ராஜ்யங்களிலிருந்தும் வந்திருந்த குடியரசுக் கட்சித் தலைவர்களிடையே பேசுகையிலேயே அவர் அவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார்.

ஐசனேவர், மீண்டும் குடியரசுத் தலைவராக வருவதற்காக 1956-ம் ஆண்டுத் தேர்தலில் போட்டியிடுவார் என்று கட்சித் தலைவர்கள் நம்பிக்கொண்டிருப்பதாக உதவித் தலைவர் நிக்சன் சமீபத்தில் தெரிவித்திருந்தார்; அது பற்றிப் பேசுகையிலேயே ஐசனேவர், மேற்கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறார்.

## அமெரிக்காவில் இந்தியப் படங்கள்

### பிரபலமாகவும் இல்லையாம்; பணமும் கிடைக்கவில்லையாம்!

புதுடில்லி, செப் 12—

"இந்தியப் படங்கள் மூலம் அமெரிக்கா, ரஷ்யா ஆகிய 13 நாடுகளிலிருந்து பணம் எதுவும் கிடைக்கவில்லை; இந்தியப் படங்கள், அமெரிக்காவில் பிரபலமாகவும் இல்லை," என்று, மக்கள் சபையில், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கப்பட்டபோது குறிப்பிடப்பட்டுள்ளது.

அமெரிக்கப் படங்களைப் பொறுத்த மட்டில், இவ்வாண்டு ஜனவரி முதல் ஜூன் வரையில் ரூ. 16,89,000 அமெரிக்காவுக்கு அனுப்பப்பட இருப்பதாகவும், இதே காலத்தில் ரஷ்யாவிற்கு எவ்விதத் தொகையும் அனுப்பப்படவில்லையென்றும் சபையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

## தெரிந்து கொள்ளுங்கள்

### முந்திரி உற்பத்தி

1953—54ம் ஆண்டில் முந்திரி சாகுபடி செய்யப்பட்ட பிரதேசத்தின் பரப்பளவு சுமார் 1,71,000 ஏக்கரா; அவ்வருடம் உற்பத்தியான முந்திரிப் பருப்பு 55,182 டன்; முன் வருட உற்பத்தி 53,369 டன்; 1951—52ல் உற்பத்தி 56,975 டன்.

### கைத்தறித் துணி உற்பத்தி

இந்தியாவில், கைத்தறித் துணி உற்பத்தி 1951-ல் 84,98,10,000 கெஜமும், 1952-ல் 110,87,60,000 கெஜமும். 1953-ல் 120,00,20,000 கெஜமும், 1954-ல் 131,82,10,000 கெஜமும் உற்பத்தி செய்யப்பட்டதாம்.

வெளிநாடுகளுக்கு 1951-ல் 436 இலட்சம் கெஜமும், 1952-ல் 539 இலட்சம் கெஜமும், 1953-ல் 625 இலட்சம் கெஜமும், 1954-ல் 561 இலட்சம் கெஜமும் கைத்தறித் துணி ஏற்றுமதி செய்யப்பட்டது.

இந்தியாவின் வெளிநாட்டுச் செய்திப் போக்குவரத்து சர்வீஸ் தற்போது ஆண்டுதோறும் சுமார் 700 இலட்சம் வார்த்தைகளைக் கையாண்டு வருகின்றன; 1927-ம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 120 இலட்சமாக இருந்தது.

## இலங்கையில் சினிமாத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்!

கொழும்பு—

வேலையிலிருந்து நீக்கப்பட்ட சிலோன் தியேட்டர்சைச் சேர்ந்த 13 தொழிலாளர்களையும் மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ளும்படி வேண்டி அதன் தொழிலாளர் யூனியன் மூலம் பலமுறை வற்புறுத்திக் கேட்டும் முதலாளிகள் இணங்க மறுத்துவிட்டபடியால், 13 பேர்களையும் வேலையில் சேர்த்துக்கொள்ளும்படி வற்புறுத்துமுகமாக, அந்த நிறுவனத்தைச் சேர்ந்த எல்லா தியேட்டர்களிலுமுள்ள தொழிலாளர்களும் கடந்த 7 நாட்களாக வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர்.

வேலை நிறுத்தக்காரருக்கு ஆதரவு தரும்படி அந்தத் தொழிலாளர் யூனியன் சார்பில் இலங்கை தி மு கழகத்திற்கு அழைப்பு வந்ததற்கிணங்க, வேலை நிறுத்த 7-ம் நாளிலிருந்து இ தி மு. கழகத் தோழர்கள் பலர் கலந்து, வேலை நிறுத்தம் செய்து வரும் தோழர்கட்கு உதவி புரிந்து வருகின்றார்கள். கழகச் சார்பில் சிறுதொகை பொருளுதவியும் வேலை நிறுத்தக்காரருக்கு இலங்கை தி. மு. கழகச் செயலாளர் மூலம் அளிக்கப்பட்டது.

வேலை நிறுத்தம் நீடித்துக் கொண்டுபோவதால் பல தொழிலாளர் இயக்கங்களின் அனுதாபங்கள் உருவாகி வருகிறது. இந்நிலை உருவாக முதலாளிகள் இடமளிப்பது கூடாதென்று இலங்கை தி. மு. கழகம் கருதுகிறது. (ந. சி)

## பரிசுப் போட்டிகளைக் கட்டுப்படுத்த மக்கள் சபையில் மசோதா

புதுடில்லி, செப். 12—

பரிசுப் போட்டிகளைக் கட்டுப்படுத்துவதற்காக டில்லி மக்கள் சபையில் உதவி உள்நாட்டு மந்திரி பி. என். தத்தார் மசோதா ஒன்றினைத் தாக்கல் செய்திருக்கிறார்.

"ரொக்கமாகவோ, அல்லது வேறு வகையாகவோ பரிசின் மொத்த மதிப்பு எந்த ஒரு மாதத்திலும் ரூ. 1,000-த்திற்கு மேல் இருக்கக்கூடாது; அதற்கு மேல் பரிசு வழங்குகிற எந்த ஒரு பரிசுப் போட்டியையும் எவரும் நடத்தக்கூடாது; மேலும் ரூ. 1,000 பரிசு தரும் போட்டிகளை நடத்துவதற்குக்கூட அனுமதி (லைசென்ஸ்) பெற்றாக வேண்டும்" என்று, மசோதாவில் விதி இருக்கிறது.

"சமீப காலத்தில் குறுக்கெழுத்துப் போட்டிகளும், அவைபோன்ற வேறு போட்டிகளும் ஆபத்தான அளவுக்கு அதிகரித்துக்கொண்டே வந்திருக்கின்றன; 'திறமையைச் சோதிக்கும் பந்தயம்' என்று அவை கூறப்பட்டாலும், உண்மையில் அவை மக்களிடையே ஒரு 'சூதாட்ட'மாகவே இருந்துவருகின்றன; இவை, மக்களில் ஒரு பெரும் பகுதியினருக்கு தீமை பயக்கும் விளைவுகளைக்கொண்டவையாகவே இருக்கின்றன;

"இந்த மசோதாவின் நோக்கம் இந்தத் தீமையைக் களைவதுதான்; அதே நேரத்தில் திறமை, அறிவு ஆகியவற்றிற்கான சூதாட்ட எண்ணத்தை வளர்க்காமல், குற்றமற்ற பொழுதுபோக்காக விளங்குகின்ற போட்டிகள் நடைபெறவும் மசோதா வழிசெய்கிறது" என்பவை, மசோதாவிற்கான நோக்கமாகக் கூறப்பட்டிருக்கின்றன.

"மசோதாவில் குறிப்பிட்டிருப்பதற்கு மாறாகப் பரிசுத் தொகையின் அதிகபட்ச அளவையோ அல்லது அனுமதி பெறும் விதிகளையோ மீறுவோருக்கு 3 மாத சிறைத் தண்டனை, அல்லது ரூ. 1,000 வரை அபராதம், அல்லது இரண்டும் சேர்த்து விதிக்கப்படலாம்; சரியான கணக்கு வைத்துக் கொள்ளத் தவறுவதோ, அல்லது கணக்குகளே வைத்துக்கொள்ளாமலிருப்பதோ தண்டனைக்குரிய குற்றங்கள்" என்றும், "ரூ 500 வரை அதற்காக அபராதம் விதிக்கலாம்" என்றும் கூறப்பட்டிருக்கிறது.

மசோதாவின் பிரிவுகளுக்கு மாறாக எந்தப் பத்திரிகையும் பரிசுப் போட்டித் திட்டத்தையோ அல்லது விளம்பரத்தையோ பிரசுரித்தால் மாநில சர்க்கார் 'கெஜட்'டில் பிரசுரம் செய்வதின் மூலம் அந்தப் பத்திரிகையின் ஒவ்வொரு பிரதியையும் பறிமுதல் செய்யலாம்; இது சம்பந்தமாக 'விதி'கள் இயற்றும் அதிகாரம் மாநில 'சர்க்கார்'களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

## தென்னாட்டில் கரும்பு ஆராய்ச்சி நிலையங்கள்

### நெல்லிக்குப்பம், திருச்சியில் நிறுவப்படும்?

சென்னை, செப். 12—

சர்க்கரை 'செஸ்' நிதியிலுள்ள பணத்தை உபயோகித்து நெல்லிக்குப்பத்திற்கு அருகில் 100 ஏகரா விஸ்தீரணமுள்ள இடத்தில் ஒரு முதல்தரமான கரும்பு ஆராய்ச்சி நிலையத்தையும், திருச்சியில் ஒரு சிறு ஆராய்ச்சி நிலையத்தையும் ஏற்படுத்த சென்னை சர்க்கார் உத்தேசித்திருக்கிறார்களாம்.

நெல்லிக்குப்பம் நிலையத்தை ஏற்படுத்துவதற்கு சுமார் ரூ.7 இலட்சம் செலவாகும் என்று மதிப்பிடப்படுகிறது.

ஒவ்வொரு சர்க்கரை ஆலைக்கும் ஒரு கரும்புப் பண்ணை ஆரம்பிக்கவும் சர்க்கார் உத்தேசித்துள்ளனர். இந்தச் செலவுகள் சர்க்கரை 'செஸ்' நிதியிலிருந்து ஈடுசெய்யப்படும்.

ஆராய்ச்சி நிலையத்தையும், பண்ணைகளையும் ஆரம்பித்த பிறகு மீதம் பணமிருந்தால், சர்க்கரை ஆலைக்குப் போகும் பாதைகளைச் சீர்படுத்துவதற்கு அந்தப் பணம் உபயோகிக்கப்படுமாம்.

ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்துவதற்கு சர்க்கரை ஆலை சொந்தக்காரர்கள் உதவி செய்ய ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

## முதலாளித்துவம் உருப்படாதென்று இந்தியா கருதுகிறதாம்!

### உதவியை உடனடியாக நிறுத்தக் கோரிக்கை?

"இந்தியாவில் ஆட்சிபீடத்தில் உள்ள அரசியல் கட்சி, சோஷலிஸ்டுக் கொள்கையைப் பின்பற்றத் தீர்மானித்துள்ளது; மேற்கத்திய நாடுகளின் முதலாளித்துவம் உருப்படாதென்று இந்தியா கருதுகிறது; கம்யூனிஸ்டு சீனவைப்போலவே இந்தியாவும் அமெரிக்க அரசாங்கத்தை வெறுக்கிறது. இந்தியா, சோவியத் ரஷ்யாவைப் பின்பற்றுவதாக அதன் தலைவர்களின் அறிக்கைகளிலிருந்து நன்கு புலனாகிறது,"

என்று, அமெரிக்கக் குடியரசுக் கட்சிசெனேட்டார் கார்ல் கர்ட்டிஸ் கூறியுள்ளார்.

"இந்தியாவுக்கும், யூகோஸ்லேவியாவுக்கும் அமெரிக்கா அளித்து வரும் உதவியை உடனடியாகவும், இறுதியாகவும் நிறுத்திவிடுவதற்குத் தகுந்த காரணம் இருக்கிறது; இந்த இரு நாடுகளும் சோவியத் ரஷ்யாவுடன் குலாவுகின்றன; ஆகவே, அவற்றின் போக்கைக் கவனித்து புத்திசாலித்தனமாக நமது போக்கையும் மாற்றிக் கொள்ள வேண்டும்" என்றும் அவர் கூறியுள்ளார்.

## பாட்னு சட்டசபை முன் ஆர்ப்பாட்டம்

### 5,000 மாணவர்கள் பங்கேற்றனர்

#### கண்டன ஊர்வலத்தில் முன்னாள் போலீஸ் தலைமை அதிகாரி

பாட்னு, செப். 12—

ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தபடி, பீகார் சட்டசபைக் கட்டடத்தின் முன்பு மாணவர்களும், எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர்களும் கூடி ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கின்றனர்.

பாட்னுவிலும், கவாதாவிலும் மாணவர்கள்மீது நடத்தப்பட்ட துப்பாக்கிப்பிரயோகத்திற்கு எதிராக இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றுள்ளது.

நகரின் முக்கிய வீதிகள் வழியாகவெல்லாம் நான்கு ஊர்வலங்கள் நடத்தப்பட்டன; பின்னர், ஊர்வலத்தில் கலந்துகொண்டோர் ஒன்றுகூடி, சட்டசபை, சர்க்கார் தலைமை அலுவலகம் ஆகியவை முன்பு கூடி ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கின்றனர்.

ம. சோ. கட்சியினரும் ஒரு ஊர்வலம் நடத்தியிருக்கின்றனர்.

அசோக் மேத்தா, பீகார் முன்னாள் தலைமை போலீஸ் அதிகாரியான அமீது ஆகியோர் அந்த ஊர்வலத்தில் பங்கு பெற்றிருக்கின்றனர்.

சுமார் 5,000 மாணவர்களடங்கிய மற்றொரு மாபெரும் ஊர்வலமும் நடைபெற்றிருக்கிறது.

நகரில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டங்களில் மொத்தமாக 30,000 பேர்கள் கலந்துகொண்டிருக்கின்றனர்.

★

## மந்திரி சபை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம்

பாட்னு, செப். 12—

டாக்டர் சின்ஹா தலைமையில் உள்ள பீகார் மாநில காங்கிரஸ் மந்திரி சபை மீது, மாநில ம. சோ. கட்சித் தலைவராயிருக்கும் மஹாமாயா பிரசாத் சின்ஹா என்ற எதிர்க்கட்சி உறுப்பினர் சட்டசபையில் தாக்கல் செய்துள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தினை சபைத் தலைவர் விந்தேஸ்வரி பிரசாத் வர்மா ஏற்றுக்கொண்டிருக்கிறார். செப். 13, 14-ம் தேதிகளில் இந்தத் தீர்மானம் விவாதிக்கப்படும்.

காங்கிரஸ்காரர்கள் பலர், 'நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகம் பற்றி விசாரணை நடைபெற்று வருவதால் இங்கு அது பற்றி விவாதிக்கக்கூடாது,' என்று கூறி, தீர்மானத்தை எதிர்த்திருக்கின்றனர்.

ம. சோ. கட்சி, ஜார்கந்த் கட்சி, ஜனதா கட்சி, மக்கள் சேவா சங்கம் ஆகியவற்றைச் சேர்ந்த சில சுயேச்சைகள் உட்பட 65 எதிர்க்கட்சியினர், தீர்மானம் விவாதிக்கப்பட வேண்டும் என்று கோரியதின் பேரில், சபைத் தலைவர் தீர்மானத்தை அனுமதித்திருக்கிறார்.

தீர்மானத்தை எதிர்த்து முதன் மந்திரி டாக்டர் ஸ்ரீ கிருஷ்ண சின்ஹாவும் பேசினாராம்.

## பொதுத்தேர்தலில் 91 இடங்களையும் ஒரே கட்சி கைப்பற்றியதாம்!

ப்நாம் பென், செப். 12—

கம்போடிய தேசிய சட்டசபைக்கு நடைபெற்ற பொதுத் தேர்தலில், சபையில் உள்ள 91 இடங்களையும், முன்னாள் கம்போடிய மன்னர் நோரோடம் சிஹானெளக் சார்ந்துள்ள 'சோஷலிஸ்டுக் கம்யூனிட்டி'க் கட்சியினர் கைப்பற்றி இருக்கின்றனர்.

இந்தோ—சீன நாடுகளில் ஒன்றான கம்போடியாவில், 'மன்னர் ஆட்சியை—முடியாட்சியை ஒழிப்போம்,' என்று சபதம் பூண்டிருந்த ஜனநாயகக் கட்சி ஒரு இடத்தைக் கூடப் பிடிக்க முயலவில்லை என்று அதிகார பூர்வமாக அறிவிக்கப்படுகிறது.

கடந்த ஆண்டு, இந்தோ—சீன யுத்தத்திற்கு முடிவுகண்ட ஜினீவா ஒப்பந்தப்படி, இந்தோ—சீன நாடுகளான வியட்நாம், லாவோஸ், கம்போடியா ஆகியவற்றில் பொதுத் தேர்தல்கள் நடைபெற வேண்டும் என்று கூறப்பட்டிருந்தது; அதன்படியே இந்த கம்போடியா பொதுத் தேர்தல்கள் நடைபெற்றிருக்கின்றன.

இந்தத் தேர்தல்களில் போட்டியிட்ட மற்றொரு கட்சி, கம்யூனிஸ்டுகளின் 'மக்கள் கட்சி'யாகும்; இதுவும் ஒரு இடத்தைக்கூடப் பெறமுடியவில்லை.

## மறைவு

பெங்களூர் மாவட்டப் பொதுக்குழு உறுப்பினர் தோழர் ஏ. டி. பிரான்சிஸ் அவர்களது தந்தையார், 6—9—55-ல் கடலூரில் இயற்கை எய்தினர். அன்னாரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கு நமது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம். (ஆ-ர்.)

## அனுதாபம்

சிறுகளப்பூர் தி. மு. கழகச் செயற்குழு உறுப்பினர் தோழர் க. கதிர்வேல் அவர்கள் திடீரென மாரடைப்பினால் இறந்துவிட்டார். அன்னாரை இழந்து தவிக்கும் குடும்பத்தாருக்கு கிளைக் கழகச் சார்பில் அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

* * *

இராமநாதபுரம் மாவட்டத் துணைச் செயலாளர் தோழர் அ. உ. இராமநாதன் அவர்களின் தாயார் இராசம்மாள் 10-9-55ல் இயற்கையெய்தியமை குறித்து, மானாமதுரை தி. மு. க. கிளைச் சார்பில் அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

# தி.மு.க. ஏழாவது ஆண்டுவிழா கொண்டாடுவீர்

# பாரதியைப் பாராட்டுவோரின் 'பாசாங்கு'!

## 'உலகுக்கு அவரது முழு உருவத்தை நாம் காண்பிப்பது கண்டு அச்சமுறுகின்றனர்!'

ஏற்றத்தாழ்வும் ஏழ்மையுமற்ற சமுதாயத்தை உருவாக்குவது பற்றி அண்ணாதுரை

**12—9—55** மாலை 5½ மணியளவில், சென்னை இராயபுரம் இரயில்வே இன்ஸ்ட்டிடியூட்டில் நடைபெற்ற பாரதி விழாவில், அண்ணா அவர்கள் 'மக்கள் கவிஞர்' எனும் தலைப்பில் நிகழ்த்திய சொற்பொழிவின் முற்பகுதி நேற்றைய இதழில் வெளியிடப் பெற்றுள்ளது, பின் பகுதி இங்கு தரப்படுகிறது:—

"பாரதியை தேசியக் கவி என்று மட்டும் கூறுவது, ஒரு தொடர் கதையின் முதல் அத்தியாயத்தை மட்டும் படித்துவிட்டு, 'கதையே அவ்வளவுதான்' என்று கூறுவது போன்றதாகும்;

"சிலர், பாரதியின் தேசிய உணர்ச்சியூட்டிய கவிதைகளை மட்டும் பாராட்டி விட்டு, அவர் பாடிய ஏனைய கவிதைகளை மறைத்துவிடுகின்றனர்;

"மனிதன் ஒருவன், கையிலும், காலிலும் விலங்கிடப்பட்டு, முழங்கால் அளவு சேற்றில் நிறுத்தப்பட்டிருக்கிறான்; அவன் தலையில் கனமான பாரம் வேறு வைக்கப்பட்டிருக்கிறது; அந்தப் பாரமோ, ஒரு செத்துப்போன கன்றுக்குட்டி; அந்தக் கன்றின் உடலை உயரேயிருந்து காகமும், கழுகும் கொத்தித் தின்று கொண்டிருக்கின்றன— வட்டமிட்டுப் பறந்துகொண்டே; அதனால் வழியும் குருதி அந்த மனிதனின் முகத்தில் வழிந்தோடுகிறது; கழுகும், காகமும் கன்றினைக் கொத்தித் தின்னும் போது, சிதறிவிழும் சிறுசிறு துண்டுச் சதை மனிதனின் கண்களில் விழுந்து கண்களை உறுத்துவதுடன், பார்க்க முடியாமலும் மறைக்கின்றன;

"இந்த நிலையில் இருக்கும் ஒரு மனிதனை விடுவிக்க நினைப்பவர் முதலில் என்ன செய்வார்? பாரத்தை இறக்குவாரா? கழுகையும், காகத்தையும் விரட்டுவாரா? சேற்றிலிருந்து கரைக்கு இழுத்து வருவாரா? கண்ணில் விழும் துண்டுச் சதைகளை அகற்றுவாரா? முகத்தில் வழியும் குருதியைத் துடைப்பாரா? அல்லது, அவர் கைகளிலும் கால்களிலும் பூட்டப்பட்டிருக்கும் விலங்கினை ஒடிப்பாரா? என்ன செய்வார்?

"விலங்கினை ஒடித்தால், தளையை அறுத்தால் மனிதன் சேற்றிலிருந்து வெளிவரவும், பாரத்தை இறக்கவும், குருதியைத் துடைக்கவும், கழுகையும் காகத்தையும் விரட்டவும் முடியும்-என்பதால், 'தளை'யை அறுக்கவே நினைத்தார் பாரதியார்; எனவேதான்; அவர், விடுதலைக் கனல் மூட்டும் கவிதைகளை ஆவேசத்தோடு பாடினார்;

"பாரதியார் இன்று உயிருடன் இருந்திருந்தால், தளை அறுபட்ட மனிதனைச் சேற்றிலிருந்து வெளிக்கொணர்தல் போன்ற காரியங்களை மேற்கொண்டிருப்பார்; அந்த ஆசை அவருக்கு இருந்தது என்பதற்கான கவிதைகள் பல அவர் இயற்றியிருக்கிறார்;

"'உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும், அச்சமில்லை, அச்சமில்லை' — என்று பாடிய பாரதியைப் பாராட்டுபவர்கள், பாரதியின் முழு உருவத்தையும் உலகுக்குக் காட்டுவதற்கு அச்சப்படுகிறார்கள்; பாரதியின் முழு உருவத்தையும், உண்மையான பாரதியையும் உலகுக்கு நாம் அறிவிப்பது கண்டு அச்சப்படுகின்றனர்; மந்திரிகள், எங்கே தாங்கள் செல்வாக்கு இழந்து, அதிகாரம் கைவிட்டுப் போய்விடுமோ என்று அச்சப்படுகிறார்கள்;

மேலும் சிலர், பாரதி, கடவுளைப் பற்றி அங்கொன்றும் இங்கொன்றுமாகப் பாடியுள்ள கவிதைகளைக் காட்டி, 'இவை உங்களுக்கு 'உடன்பாடா?' என்று கேட்கின்றனர்;

"கடவுளைப் பற்றிய பாடல்கள் இயற்றியதற்காகப் பாரதியார் பாராட்டப்பட வேண்டியவர் என்றால், அது பொருத்தமானதல்ல; ஏனெனில், பாரதியார், கடவுளைப் பற்றி இங்கொன்றும், அங்கொன்றுமாகத்தான் பாடியிருக்கிறார்; ஆனால், பாரதிக்கு முன்பு பல கவிஞர்கள், கடவுளைப் பற்றி ஆயிரக்கணக்கான காதைகளை—பாடல்களை—பாசுரங்களைப் 'பக்தி ரசம்' சொட்டப் பாடியிருக்கின்றனர்; அவர்கள் பாடல்களைக்காட்டிலும் பாரதியாரின் கடவுளைப் பற்றிய பாடல்கள், சிறப்புடையன அல்ல—பாராட்டப்படுவதற்கு!

"பாரதியார் ஒரு இடத்தில், 'கடவுள், மனிதனுக்குச் சேவை செய்வதற்காகவே படைக்கப்பட்டவர்,' என்று பொருள் படும்படி பாடியிருக்கிறார்; 'கண்ணன் என் கடவுள்; அவன் என் வேலைக்காரன்; அவன் எனக்கு மாடு மேய்த்துத் தருவான்; பால் கறந்து கொடுப்பான்' — என்றெல்லாம் பாடியிருக்கிறார்; 'கடவுளான கண்ணன், மக்களின் வேலைக்காரன்,' என்கிறார் பாரதியார்; 'கடவுள், மனிதருக்கு வரும் இன்னல்களைத் துடைப்பதற்காகப் படைக்கப்பட்டவர்' என்கிறார், பாரதியார்; நாம் இப்படிச் சொன்னால், சீறி விழுவார்களே பக்தர்கள்!

"எனவே, 'உண்மையான பாரதி உலகுக்கு எடுத்துரைக்கப் படவேண்டும்,' என்று நாம் விரும்புகிறோம்;

"பாரதியின் வரலாறு பற்றிக் கூறுகையில், 'புதுவையில், கனக லிங்கம் என்ற தாழ்த்தப்பட்ட தோழர் ஒருவரை அழைத்து, தான் மார்பில் அணிந்திருந்த பூநூலை எடுத்து அந்தத் தோழர் மார்பில் பாரதியார் அணிவித்தார்,' என்று கூறப்படுவதுண்டு; 'தாழ்த்தப்பட்டவர் மார்பில் பூநூல் அணிவித்ததினாலேயே அவர் உயர்ந்தவராகிவிடுவாரா?' — என்பதை அல்ல, நான் இங்கு உங்களிடம் கூறுவது; ஆனால், பாரதியார், 'எல்லோரும் ஓர் குலம்; எல்லோரும் ஓர்நிறை,' என்ற நிலை சமுதாயத்தில் மலர வேண்டும்—என்று விரும்பினார்; 'சமுதாயத்தில் ஒரு சாரார் தாழ்த்தப்பட்டவர்கள்—தீண்டப்படாதவர்கள், மற்ற சாரார் உயர்ந்தவர் என்ற பாகுபாடு, சீர் குலைவு இருக்கக் கூடாது,' என்று ஆசைப்பட்டார் என்பதைத்தான் நான் உங்களிடம் சொல்ல விரும்புகிறேன்;

"ஒரு கவிஞன் மாளிகையைப் போன்றவன்—என்று நான் துவக்கத்தில் கூறினேன்; மாளிகையைப் பயன்படுத்துபவனைப் பொறுத்து மாளிகையின் சிறப்பு இருக்கும் என்பதால், கவிஞர்களின் கருத்துக்கள் பயன்படுத்துவதைப் பொறுத்திருக்கிறது;

"மாளிகையை நல்ல காரியத்திற்காக, தேவையான பணிகளுக்காகப் பயன்படுத்துவதில்தான் மாளிகையின் மாண்பிருக்க முடியும்; அதுபோலவே கவிஞனும்; மாளிகை, அக்கிரமக்காரன் வசமிருந்தால் — கொள்ளைக்காரர்கள் குடியேறியிருக்கும் இடமாயிருந்தால் மாளிகையின் மாண்பு குறையும்; அதுபோலவே பாரதியைப் பயன்படுத்துபவர்களைப் பொறுத்தது, அவர் கவிதையின் மாண்பு;

"நாட்டுக்குத் தேவையான—நாட்டவருக்குப் பயன்தரத்தக்க காரியங்களுக்காகப் பாரதியார் தன் கவிதா சக்தியைப் பயன்படுத்தினார்—என்பதை, நாம் மனதில் கொள்ளவேண்டும்; இன்று அவர் கவிதை பயன்பட வேண்டுமானால், நாம் எப்படிப்பட்ட மக்கள் சமுதாயத்தைக் காண விரும்புகிறோம் —என்று முதலில் கணித்துக் கொள்ளவேண்டும்; அப்படிப்பட்ட மக்களை உருவாக்குவதற்கு பாரதியின் கவிதைகளில் உபயோகப்படுவனவற்றை—தேவையானவற்றை எடுத்துக்கொள்ள வேண்டும்;

"பாரதியின் கவிதைகள் ஒரு இரயில்வே 'கைட்' (கால, இட அட்டவணை) போன்றவை; இரயில்வே 'கைட்' கொண்டு, நாம் போகவேண்டிய இடத்துக்கு எந்த வழியாக, எந்த வண்டி மூலமாக, எவ்வளவு நேரத்தில் போய்ச் சேரலாம்—என்பதைத் தெரிந்து கொள்ளலாம்; ஆனால், நாம்; 'கைடி'ல் உள்ள எல்லா இடங்களுக்கும் திட்டமின்றிப் புறப்பட முடியாது; எல்லா இடங்களுக்கும் போயாக வேண்டிய அவசியமுமிராது; நாம் போய்ச் சேரவேண்டிய இடத்தை முடிவுசெய்து கொண்டு, இரயில்வே 'கைடை'ப் பார்த்து இடம் நோக்கிப் புறப்படலாம்; அதுபோல, நாம் காண விரும்பும் சமுதாயத்தைக் கண் முன் நிறுத்தி, அப்படி ஒரு சமுதாயத்தைக் காணுவதற்கான வழியையும், பிறவற்றையும் பாரதி பாடல்களிலிருந்து தேடி எடுத்துக் கொள்ளவேண்டும்

"நாம் வாங்கவேண்டிய சாமான்களுக்குப் பட்டியல் தயாரித்துக் கொண்டு கடைக்குப் புறப்படுவது போல, நாம் காண விரும்பும் சமுதாயத்தின் பல்வேறு நிலைபற்றிய அம்சங்களையும் மனதில்கொண்டு, பாரதி பாடல்களைப் பார்க்கவேண்டும்;

"நாம் எப்படிப்பட்ட சமுதாயத்தைக் காண விரும்புகிறோம்? இன்று உலகத்தின் பல நாடுகளிலுமுள்ளது போன்ற ஒருமக்கள் சமுதாயமா? அல்லது, இப்போது இங்குள்ள சமுதாயம் இப்படியே என்றென்றைக்குமிருக்க வேண்டுமா? அல்லது, பாரதி கால சமுதாயம் மாதிரியா?—என்பதை நாம் கருதிப் பார்க்கவேண்டும்;

"நாம், ஏற்றத் தாழ்வுகளற்ற —ஏழ்மையும் இல்லாமையும் இல்லாத —'எல்லோரும் ஒன்று; எல்லோரும் ஒரு நிறை' என்ற நிலையான அறிவு படைத்த மக்கள் சமுதாயத்தை உருவாக்க விழைகிறோம்;

"அப்படிப்பட்ட சமுதாயத்தை உருவாக்குவதற்கு நாம் பாரதியின் பாடல்களில் உள்ள நல்ல பல கருத்துக்களைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்."

## சி. பி. சிற்றரசு

சுற்றுப்பயணம்

| | |
|---|---|
| செப். 16 | சென்னை—1-வது வட்டம் பொதுக்கூட்டம் |
| 17 | ஆவடி |
| 18 | திருப்பத்தூர் (வ. ஆ.) காலை 10 மணிக்கு மீனாட்சி தியேட்டரில் சி. எம். எஸ். நினைவு மன்றத் திறப்பு |
| 19 | சென்னை-பெத்துநாய்க்கன்பேட்டை |
| 20 | பூந்தமல்லி |
| 24 | தஞ்சை |
| 25 | கடலூர் ஓ. டி. |
| 27 | செங்கோட்டை |

## இந்த அனுமதிக்கு என்ன அர்த்தமோ?

சென்னை, செப். 13—

அக். 1-ந் தேதி முதல் ஓராண்டிற்குப் பரீட்சார்த்தமாக விற்பனை வரிக் கணக்குகளை அசாம், வங்காளி, குஜராத்தி, இந்தி, கன்னடம், காஷ்மீரி, மலையாளம், மராத்தி, ஒரியா, பஞ்சாபி, சமஸ்கிருதம், தமிழ், தெலுங்கு, உருது ஆகிய மொழிகளில் எழுதலாமென்று சர்க்கார் அனுமதித்திருக்கின்றனர்.

## சம்பத் முழக்கம்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

நிகழ்ந்து கொண்டிருந்தன; ஆனால் இப்போது, தினம் தினம் ஏதேனும் நிகழ்ச்சிகள், இருக்கின்றன; பல பிரச்சினைகள் புதிது புதிதாகப் படைக்கப்படுகின்றன;

"நாட்டில், இப்படி பிரச்சினைகள் வளர்ந்துகொண்டேயிருக்கும் போது, நாம், நமது இலட்சியத்தையும், கொள்கைகளையும் நிறைவேற்றிக்கொள்ள இந்த ஆண்டு விழாவின்போது, நாட்டில் உள்ள பிரச்சினைகளையும் எண்ணிப் பார்த்து, முயற்சிகளில் ஈடுபடவேண்டும்;

"கடந்த காலத்தில் நாம் புரிந்துள்ள பணிகள் பற்றியும், எதிர் காலத்தில் நாம் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் நாம் இங்கு எண்ணிப் பார்க்க வேண்டும்;

"இன்று, ஐதராபாத்தில் ஒரு 'ராஷ்டிரபதி நிலயம்' அமைக்கப் போவதாயும், ராஷ்டிரபதி அங்கு ஆண்டொன்றுக்கு இரண்டு மாதம் தங்கப் போவதாயும் செய்தி வந்திருக்கிறது;

"இதற்கு முன்பாக, 'தென்னாட்டு மாநிலங்கள் ஏதேனும் ஒன்றில் மக்கள் சபைக் கூட்டத்தை நடத்தவேண்டும்; டெல்லியிலேயே எப்போதும் நடத்திக் கொண்டிருக்கக் கூடாது,' என்று ஒரு யோசனையைக் கூறினார்கள்.

"வடநாட்டுக்காரர்கள், 'இதற்காக ஒரு 'நடமாடும் மக்கள் சபை'யைக்கூட நடத்த வேண்டும்,' என்று கூறினாலும், ஆச்சரியத்திற்குரியதல்ல!

"இப்படி, தென்னாட்டு மக்களைத் திருப்திப்படுத்த வேண்டும் என்று வடவர் மேற்கொள்ளுகிற இந்த நடவடிக்கைகள், நாட்டுக்கும் நமக்கும் எதைச் சொல்லுகின்றன? நமது எண்ணங்கள், உருவெடுக்கத் தொடங்கிவிட்டன' என்பதைத் தானே?

"இன்று, ஐந்தாண்டுத் திட்டம், இரண்டாம் திட்டம் பற்றி எல்லாம் சர்க்கார் பேசுகின்றது;

"முதல் திட்டத்தில் தென்னாடு புறக்கணிக்கப்பட்டதை நாம் வன்மையாகக் கண்டித்தோம்; வடவரின் வஞ்சகத்தைச் சுட்டிக்காட்டினோம்; கண்டனக் குரலை நாடெங்கும் எழுப்பினோம்;

"இன்று இரண்டாம் திட்டம் வெளியிடுவது என்றால், சர்க்கார் யோசிக்கிறது—'தி. மு. கழகம் என்ன சொல்லுமோ?'—என்ற அச்சத்தோடு!

"சேலத்து இரும்பைக் காட்டி தொழிற்சாலை வேண்டும் என்றும், நெய்வேலி நிலக்கரியைக் காட்டி அதைத் தோண்டி எடுக்கவேண்டும் என்றும் கூறிவருகிறோம்; இவற்றையெல்லாம் செய்யாமலிருப்பதற்கு சர்க்கார் என்ன என்னவோ-விஞ்ஞானக் காரணங்களைக் காட்ட முன் வந்தனர்; நாமும், விஞ்ஞான ரீதியான வாதங்களைத் தந்தோம்;

"பின்னர் எதை எதையோ சொல்ல முயன்று, 'இரண்டாம் திட்டத்தில் இவை நடக்கும்' என்று கூறமுற்பட்டனர்—இங்குள்ள சென்னை மந்திரிகள்;

"இரண்டாம் திட்டம் என்ன வாயிற்று? ரூ. 400 கோடி பெற வேண்டும்—என்று பேசிச் சென்றார், மந்திரி சுப்பிரமணியம்; ஆனால், பெற்றதோ ரூ. 200 கோடியே; கேட்டால், பரதேசி போலப் பேசுகிறார்—'கிடைத்ததே போதும்,' என்று!

"மந்திரி சுப்பிரமணியத்தின் உள்ளத்திருப்தியைப் பொறுத்தது அல்ல—நாட்டு மக்களின் வாழ்க்கையும், அதன் நலனுக்கான அபிவிருத்தித் திட்டங்களும்;

"சென்னை மந்திரிகள், இந்த இருநூறு கோடி பெறுவதற்கே, 'டில்லி மந்திரிகளின் தயவு பிறந்துவிட்டது' என்பதைப்போல் பேசுகின்றனர்;

"நாம், ஏதோ ரூ. 400 கோடித் திட்டமும் டில்லியால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்பதையே இலட்சியமாகக்கொண்டிருப்பதைப்போலவும், அதற்கு நமக்குச் சமாதானம் சொல்வதைப் போலவும் முயற்சிக்கின்றனர்;

'நமது கோரிக்கையெல்லாம், 'டில்லி ஏன் ரூ 400 கோடி திட்டத்தை ஏற்றுக்கொள்ளவில்லை—200 கோடியாகக் குறைத்தது? என்பது மட்டுமல்ல — நமது நாட்டு மக்களுக்கான அபிவிருத்தித் திட்டங்கள் டில்லியின் தலையாட்டலைப் பெற்ற பின்னர் தான் நடைமுறைக்கு வரவேண்டுமென்று ஏன் இருக்கவேண்டும்—டெல்லிக்கு ஏன் திட்டங்களைத் தூக்கிக் கொண்டு போக வேண்டும்?—என்பதுதான்;

"நாம், நமது நாட்டு மக்களுக்கு உரிமை வேண்டும்—என்கிறோம்; நமது தலைவிதியை நிர்ணயிக்கிற உரிமை நமக்கே வேண்டும் —நமக்கு மட்டுமே வேண்டும்—என்று கூறுகிறோம்; நாம் அந்த விடுதலைக் கோரிக்கையில் சிறிதும் விட்டுக் கொடுப்பதற்கில்லை; விடுதலை, விட்டுக் கொடுக்கக் கூடிய ஒன்றுமல்ல."

(பேச்சு முடியவில்லை)

### ஏஜெண்டு தோழர்கட்கும், சந்தா நேயர்களுக்கும்

★

'நம் நாடு' இதழ்கள் காலந் தாழ்ந்து கிடைக்கும் நாட்களில், இதழின்மேல் சுற்றி அனுப்பும் உறை(Wrapper)யையும் உடன் அனுப்பித் தெரிவிக்கும்படி நாம் ஏற்கனவே அறிவித்திருப்பதையொட்டி, சில தோழர்கள் உறைகளை அனுப்பித் தங்கள் குறைகளைத் தெரிவித்துள்ளனர்.

அவைகளை, சம்பந்தப்பட்ட தபால் இலாகா அதிகாரிகளுக்கு அனுப்பி, ஆவன செய்யப்பட்டு வருகிறது என்பதைக் கடிதம் எழுதியிருக்கும் தோழர்கள் அனைவருக்கும் தனித்தனியாக அல்லாமல் இதன்மூலம் தெரிவித்துக்கொள்கிறோம்.

| | |
|---|---|
| சென்னை-13<br>14—9—55 | பொறுப்பாளர்<br>'நம் நாடு' |

### பொதுக்கூட்டம்

★

15—9—55 மாலை 5 மணிக்கு, சமுத்திரம் (திருச்செங்கோடு வட்டம்) பழைய பாடசாலை நிலத்தில், ஆதிதிராவிட வாலிபர் சங்கச் சார்பில், தோழர் தி. பழனிமலை தலைமையில் நடைபெறும். தோழர்கள் இரா. தாண்டவன், ப. இராமலிங்கம் ஆகியோர் பேசுவர்.

### 'கால் வலி'யை மறக்க வானொலி இசையா?

புதுடில்லி, செப். 13—

"டில்லியில், பஸ் நிற்குமிடங்களில் காத்துக்கொண்டிருப்பவர்களுக்கு இனிமேல் வானொலி இசை விருந்து அளிக்கப்படக் கூடும்," என்று, போக்குவரத்து மந்திரி லால்பகதூர் சாஸ்திரி ராஜ்யங்கள் சபையில் சூசகமாகத் தெரிவித்துள்ளார்.

### வருந்துகிறோம்

கொழும்பு நகரில், 'நம் நாடு' விற்பனையாளரும், இலங்கை தி. மு. கழகத் துணைச் செயலாளருமான தோழர் வி. எஸ் முருகன் அவர்களின் தந்தையார் 30—8—55-ல் இயற்கை எய்திய செய்தியறிந்து வருந்துகிறோம். தந்தையை இழந்து வாடும் தனயனுக்கும், அவரைச் சார்ந்தவர்களுக்கும் நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம் (ஆ-ர்.)

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம் ஏ.